
# திராவிடத்தால் வாழ்கிறோம்

933

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

134

# முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்!

### இல்லம் தேடி வரும் ‘நியாய விலைக் கடை’!





`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

தி.மு.கழகம் ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், கடந்த 12.08.2024 அன்று முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டம்தான் **‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டம்.**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி, பருப்பு, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி களின் வீடுகளுக்கே சென்று வழங்கும் வகையில், இந்தியாவிற்கே முன்னோடியாக, முன்மாதிரி முயற்சியாகத் தொடங்கப்பட்டுள்ள திட்டம், இந்தத் தாயுமானவர் திட்டம்.

சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகர் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று தொடங்கிவைத்து, தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையையும் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார் நம் முதலமைச்சர்.

திட்டத்தைத் தொடங்கி வைத்ததுடன், அதுதொடர்பாக அன்று சமூக வலைதளத்தில் வெளியிட்டிருந்த காணொலியில், தாயுமானவர் திட்டம் குறித்து விளக்கினார் முதலமைச்சர். தனது மனதுக்குப் பிடித்த திட்டமாக உருவாகி இருக்கிறது என்றும் பெருமையுடன் குறிப்பிட்டார் முதலமைச்சர்.

### பட்டினி இறப்பு இல்லாத மாநிலம்

திராவிட மாடல் ஆட்சிக்குப் பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் நியாய விலைக் கடைகளின் கட்டமைப்புகள் மிகச் சிறப்பான வகையில், மேம்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிதாக திறக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகளுடன், தமிழ்நாடு முழுவதும், சுமார் 34 ஆயிரத்து 500 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன.

நியாய விலைக் கடைகள் மூலம் பொதுவிநியோகக் கட்டமைப்பை சிறப்பாக செயல்படுத்தி வருவதால்தான், தமிழ்நாடு இன்றைக்கு பட்டினி இறப்புகள் இல்லாத மாநிலமாக உள்ளது என்பதைக் குறிப்பிடலாம்.

அந்த வகையில், பொது விநியோகக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்தும் விதமாக, வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் நியாய விலைக் கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்குவதில்





ஏற்படும் சிரமத்தை உணர்ந்து, தாயுமானவர் திட்டத்தை உருவாக்கி இருக்கிறது அரசு.

பயனாளிகளாக அடையாளம் காணப்படும் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் இனி நியாய விலைக் கடைக்கு பொருட்களை வாங்க செல்லத் தேவையில்லை. நியாய விலைக் கடை பொருட்கள் அவர்களின் இல்லம் தேடி வரும் வகையில், திட்டத்தின் செயல்பாடுகள் இருக்கும். 70 வயதுக்கு மேற்பட்ட 20 இலட்சத்து 42 ஆயிரத்து 657 மூத்த குடிமக்கள், ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத் திறனாளிகள் என 21 இலட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் இந்தத் திட்டத்தால் பயன்பெற உள்ளனர்.

தவிர, ஆதரவற்றோர், பெற்றோரை இழந்த குழந்தைகள், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், சிறப்பு உதவி தேவைப்படும் குழந்தைகள் கொண்ட குடும்பங்கள் போன்ற வறிய நிலையில் இருக்கும் மக்களைத் தேடி பொது விநியோகத் திட்டத்தின் பொருட்கள் கொண்டு செல்லப்படும்.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பொது விநியோகப் பொருட்கள் பயனாளிகளின் வீடுகளுக்குக் கொண்டு சேர்க்கப்படும். கூட்டுறவுத் துறைப் பணியாளர்கள் பொருட்களை வாகனத்தில் ஏற்றிக் கொண்டு பயனாளிகளின் இல்லத்துக்கே சென்று வழங்குவர்.

**70** வயதுக்கு மேற்பட்ட
**20,42,657** மூத்த குடிமக்கள்.
**1,27,797** மாற்றுத் திறனாளிகள்.
மொத்தம் **21,70,454** பயனாளிகள்.

மின்னணு எடைத்தராசு, E-POS இயந்திரம் உள்ளிட்ட கருவிகளுடன் மூடிய வாகனங்களில் அத்தியாவசியப் பொருட்கள் பாதுகாப்பாக எடுத்துக் கொண்டு செல்லப்படும். பயனாளர் களின் இல்லத்திற்கே சென்று நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர். இந்தப் பணிகளுக்காக கூட்டுறவுத் துறைக்கு 30 கோடியே 16 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சுமார் ஐந்து லட்சம் ஏழை மற்றும் விளிம்புநிலை குடும்பங் களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் இந்தத் திட்டத்தின் மூலம் செய்துகொடுக்க உள்ளது அரசு. அவர்களின் சமூகம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் முழு நோக்கம் .

### கடமை முடிந்துவிடவில்லை

திட்டத்தைத் தொடங்கி வைத்ததுடன், அது தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட காணொலியில்...

“ஒரு திட்டத்தை அறிவிப்பதுடன், கடமை முடிந்துவிடுவதாக நினைப்பதில்லை! அந்தத் திட்டத்தின் பலன் - பயன் கடைக்கோடி மனிதரையும் சென்று சேருகிறதா என்று கண்காணிப்பதையும் கடமையாக நினைக்கிறேன்” எனக் குறிப்பிட்டார். அரசின் மிகப்பெரிய கடமையை முன்னெடுத்துச் செல்கின்றனர் கூட்டுறவுத் துறை அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் கடை விற்பனையாளர்கள். அவர்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறார் தாயுமானவர்.

**“ஒரு திட்டத்தை அறிவிப்பதுடன், கடமை முடிந்துவிடுவதாக நினைப்பதில்லை! அந்தத் திட்டத்தின் பலன் - பயன் கடைக்கோடி மனிதரையும் சென்று சேருகிறதா என்று கண்காணிப்பதையும் கடமையாக நினைக்கிறேன்!”**

**...சாதனை தொடரும்**

## வாக்குத் திருடர்களின் வதந்தி!

மகாராஷ்டிரா, பீகார், கர்நாடகா மாநிலங்களில் வாக்காளர் பட்டியலில் தேர்தல் ஆணையம் செய்த முறைகேடுகளை ஆதாரப்பூர்வமாக அம்பலப்படுத்தி உள்ளார் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி. ஆனால், அதற்குப் பதில் சொல்ல வேண்டிய பா.ஜ.க.வோ, தமிழ்நாட்டில் புது வதந்தியை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது. “தமிழ்நாடு முதலமைச்சரின் கொளத்தூர் தொகுதியில் 84–ஆம் வாக்குச்சாவடியில், ஒரே வீட்டில் 30 வாக்காளர்கள் உள்ளனர். அதிலும் ரஃபியுல்லா என்ற ஒரே பெயரில் மூன்று வாக்காளர்கள் இருக்கின்றனர். இதில் முறைகேடு நடந்துள்ளது” என்று பா.ஜ.க. எம்.பி. அனுராக் தாக்கூர் கூறினார்.

இது உண்மையா, பொய்யா என்று கூட ஆராயாமல், தமிழ்நாடு பா.ஜ.க. தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்து, “முதல்வர் @ mkstalin அவர்கள், உங்கள் கொளத்தூர் தொகுதியில் ஒரே வீட்டில் 30 பேர் வாக்காளர் உள்ளார்களே இதற்கு பதில் சொல்லுங்கள்?” என்று பதிவிட்டது. வாக்குச்சாவடி முகவர்கள் உள்ள கட்சிக்கு இதன் உண்மைத்தன்மை புரிந்திருக்கும். ஆனால், தமிழக பா.ஜ.க.விற்கு அப்படியொரு வாய்ப்பை, மக்கள் வழங்கவில்லை என்பதைத்தான் இது உணர்த்துகிறது.

இருந்தபோதிலும், தமிழ்நாடு அரசின், ‘தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம்’ இதை ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. “அது தனி வீடல்ல, அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதி. அதேபோல வரிசை எண் 50–இல் ரஃபியுல்லா என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. 52–இல் கணவர் என்கிற இடத்திலும், வரிசை எண் 348, 352 ஆகியவற்றில் தந்தை என்கிற இடத்திலும் ரஃபி என்ற பெயர் இடம்பெற்றுள்ளதே தவிர, அதே பெயரில் 3 வாக்காளர்கள் இல்லை” என பா.ஜ.க.வின் அவதூறை அம்பலப்படுத்தியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருக்கு கார் ஓட்டிய தங்க நிமிடங்கள்!



வே.ராஜேஷ்

2018-ஆம் ஆண்டு, ஏப்ரல் 23 அன்று, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி, புதுக்கோட்டையில், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் மனித சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது. புதிய பேருந்து நிலையம் தொடங்கி, பழைய பேருந்து நிலையம், கீழராஜ வீதி மற்றும் நகரின் பல வீதிகள் வழியாக அண்ணா சிலையில் நிறைவடைந்தது. தலைவர் பிரச்சார வாகனத்தில் இருந்து இறங்கி, அவரது வாகனத்துக்குச் செல்வதற்கு அன்றைய மாவட்டச் செயலாளர் அண்ணன் பெரியண்ணன் அரசு வாகனத்தில் ஏறினார். அன்றைக்கு அரசு அண்ணனின் அந்த வாகனத்தை நான் எடுத்து வந்திருந்தேன். தலைவருக்கு கார் ஓட்டிய அந்தப் பத்து நிமிடங்கள், பத்து ஆண்டுகளாக இருக்கக் கூடாதோ என்று ஏங்கினேன். இப்போதும், தலைவருக்கு கார் ஓட்டிய நல்வாய்ப்பை, மாவட்டக் கழகத்தினர் பெருமையாகப் பேசுவர்.

**- வே.ராஜேஷ், தெற்கு மாநகரப் பொறுப்பாளர், மாநகரக் கழகம், புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### விலைவாசி உயர்வுக்கு எதிராக...

1962-ஆம் ஆண்டு மே 26, 27 ஆகிய இரு நாட்களில், திருச்சி வாத்தலையில் கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்தான் விலைவாசி உயர்வுக்கு எதிராக, ஜூன் 30-ஆம் தேதி, சட்டமன்றப் பேரணி, ஜூலை 01 அன்று தமிழ்நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டம்-பொதுக் கூட்டங்கள் நடத்துவது, ஜூலை 06-ஆம் தேதி ஒருநாள் அடையாள மறியல் போராட்டம் எனப் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.